1. தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் நோக்கங்கள் பற்றிய விவரங்களை மாணவர்கள் அறியும் வண்ணம் தகவல் பலகையில் வைக்க வேண்டும்.
2. தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெற தகுதியுள்ள மாணவர்களைக் கண்டறிந்து அவர்களின் விவரங்களைச் சேகரிக்க வேண்டும்.
3. தகுதியான மாணவர்கள் இந்த திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு பயனடைவதை உறுதி செய்ய வேண்டும்.
4. இத்திட்டம் UMIS உடன் இணைவு பெற்றுள்ளதால் தங்கள் கல்லூரியில் பயிலும் அனைத்து மாணக்கர்களின் விவரங்களை UMIS இணைப்பில் முழுமையாக பதிவேற்றம் செய்து முடிக்க வேண்டும். அவ்வாறு பதிவேற்றம் செய்து முடிக்கப்பட்ட மாணவர்கள் மட்டுமே இத்திட்டத்தில் பயன் பெற முடியும்.
5. ஒரு வருடத்தில் ஒவ்வொரு ஆறு மாதங்களும் அதாவது டிசம்பர் 31 மற்றும் ஜீன் 30 ஆகிய தேதிகளில் மாணவர்கள் தங்கள் கல்லூரியில் படிக்கிறார்களா / தொடர்கிறார்களா என்பதை உறுதி செய்திடல் வேண்டும்.
6. தகுதியுள்ள மாணவர்கள் அணனவருக்கும் மாணவர்களின் பெயரில் ஆதார் எண் இணைக்கப்பட்ட வங்கி கணக்கு வைத்திருப்பதை உறுதி செய்ய வேண்டும். வங்கிக் கணக்கு இல்லாத மாணவர்கள் பூஜ்ய இருப்புடன் கூடிய வங்கிக் கணக்கினை தொடங்க வலியுறுத்த வேண்டும். அக்கணக்குகள் மாணவர் பயிலுகின்ற மாவட்டத்தில் இத்திட்டத்திற்காக அங்கிகரிக்கப்பட்ட வங்கியாக இருத்தல் வேண்டும்.

அங்கிகரிக்கப்பட்ட வங்கிகள் :

1. **Indian Bank**
2. **Indian Overseas Bank**
3. **State Bank of India**
4. **Canara Bank**
5. **Bank of Baroda**
6. **Karur Vysya Bank**
7. **TN Mercantile Bank**
8. **City Union Bank**
9. **All Cooperative Banks**

7. வங்கி செயலிழப்புப் புகார்களைத் திட்ட மேலாண்மை பிரிவுக்குச் சரியான நேரத்தில் தெரிவித்தல் வேண்டும்.
8. மாணவர்களின் வங்கி கணக்கு ஆதார் உடன் இணைக்கப்பட்டதை உறுதிசெய்ய வேண்டும்.
9. கல்விச் சான்றிதழில் உள்ள பெயர் மற்றும் பிறந்த தேதி விவரங்களும் ஆதார் அட்டையில் உள்ள பெயர் மற்றும் பிறந்த தேதி விவரங்களும் ஒன்றாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

10. மேலும் ஆதார் அட்டையில் மாணவர்களின் பெயரில் உள்ள சரியான மற்றும் தற்போது பயன்பாட்டில் உள்ள தொலைபேசி எண்ணைப் பதிவு செய்திருக்க வேண்டும்.
11. தமிழ் புதல்வன் திட்டம் தொடர்பாக தங்கள் கல்லூரிக்கென ஒரு பொறுப்பு அலுவலர் (Nodal Officer) நியமித்து அவர்களின் விவரங்களை இவ்வலுவகத்திற்கு அனுப்ப வேண்டும்.
12. நிறுவனத் தலைவர்கள் மாணவர்களுக்கு சேவைகளை வழங்கவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கால வரையறையினை பேணுவதை உறுதி செய்தல் வேண்டும்.
13. இத்தட்டத்திற்கான ஒருங்கிணைப்பு அலுவலரின் பெயர் மற்றும் தொடர்பு விவர்ங்கள், மின்னஞ்சல் முகவரி போன்ற விவரங்கள் தகவல் முகமையில் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.
14. தமிழ்ப் புதல்வன் திட்டம் தொடர்பாக நியமிக்கப்பட்ட மாவட்ட திட்ட அலுவலருடன் கல்லூரி திட்ட அலுவலர் ஒருங்கிணைந்து செயல்படுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
15. இத்திட்டத்தின் பயனாளிகளின் விவரங்களை தமிழ்ப் புதல்வன் திட்ட இணைய முகப்பில் (Portal) 05.08.2024 க்குள் உள்ளீடு செய்ய வேண்டும்.